Australian Government
Department of Home Affairs

AMEP
Adult Migrant English Program

# வயதுவந்த புலம்பெயர்ந்தோர் ஆங்கிலபாடத்திட்டத்தில் குழந்தைப்பராமரிப்பு (Adult Migrant English Program)

நீங்கள் (Adult Migrant English Program AMEP) வகுப்புகளுக்குச் சமூகமளிக்கக்கூடியதாக உங்களுக்கு பிள்ளைபராமரிப்புத் தேவையா? நீங்கள் AMEP வகுப்பில் இருக்கும்போது, பள்ளிவயதடையாத உங்கள் குழந்தைகளுக்கு இலவச குழந்தைப்பராமரிப்பு பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் வீடு அல்லது AMEP வகுப்பிலிருந்து 30 நிமிட தூரத்திற்குள் குழந்தைப்பராமரிப்பை ஒழுங்குபடுத்த உங்கள் AMEP சேவைவழங்குநர் முயற்சிப்பார். இது எப்பொழுதும் கிடைக்காமல்போகலாம். உங்களுக்காக குழந்தைப்பராமரிப்பு இல்லத்தை மிகவும் கிட்டியதூரத்தில் எடுப்பதற்கு AMEP சேவைவழங்குநர் தன்னாலான முயற்சியை எடுப்பார்.

உங்களது *AMEP* பாடத்தின் ஆரம்பத்துடன் இடம்பெறும் குழந்தைப்பராமரிப்பை *AMEP* சேவைவழங்குநர் ஒழுங்குசெய்வார். நீங்கள் வகுப்பிலிருக்கும் நாட்களில் குழந்தைப்பராமரிப்பை உறுதிப்படுத்தவும்கூட அவர்கள் முயற்சிப்பார்கள். குழந்தைப்பராமரிப்புக்கான இடவசதிகள் வழக்கமாகக்குறைவாகக் காணப்படுவதாலும், எல்லோராலும் வேண்டப்படுவதாலும் சிலவேளைகளில், இது முடியாமல் போகலாம். சிலவேளைகளில், இடவசதி உடனடியாகக் கிடைக்காது அல்லது இடவசதி கிடைக்க மேலதிகநாட்கள் காத்திருக்கும்போது ஒரு பகுதிநேர குழந்தைப்பராமரிப்பு இடவசதி உங்களுக்கு வழங்கப்படலாம்.

AMEP வகுப்பில் நீங்கள் சமூகமளித்துக் கொண்டிருக்கும்போது மட்டும்தான் இலவச குழந்தைப்பராமரிப்பு வழங்கப்படுகிறது. AMEP வகுப்புநேரத்திற்கு அப்பாற்பட்டவேளைகளில்

இடம்பெறும் செயற்பாடுகளுக்கு இது கிடைக்காது. AMEP வகுப்பில் நீங்கள் சமூகமளிக்காத வேளைகளில், அல்லது நீங்கள் உங்கள் ரியுஷனை முடித்துக்கொண்டால், நீங்களே உங்களுக்கான குழந்தைப்பராமரிப்பு ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். உங்களது குழந்தையோ அல்லது குழந்தைகளோ எந்த ஒரு நேரத்திற்காயினும் பராமரிப்புக்குப் போகாவிட்டால், AMEP சேவைவழங்குநருக்கு அறிவிக்கவேண்டியது அவசியமாகும். இதனால், உங்கள் குழந்தைகள் சார்பாகச் செய்யப்பட்ட பதிவுகளைச் சரிக்கட்டலாம்.

நீங்கள் ஏராளமான AMEP வகுப்புகளைத் தவறவிடுவீர்களானால், உங்கள் குழந்தைபராமரிப்புக்கான இடவசதியை சேவைவழங்குநர் நிராகரித்துவிடக்கூடும். எவ்வாறாயினும், நீங்கள் AMEPக்குத் திரும்பவும்வந்தால், உங்களுக்கு மீண்டும் இலவச குழந்தைபராமரிப்புக்கான வாய்ப்பு வழங்கப்படும். எவ்வாறாயினும், மீண்டும் ஒரு இடம் கிடைக்கும்வரை நீங்கள் இடவசதிக்காகக் காத்திருக்கநேரிடலாம்.

உங்கள் குழந்தைப்பராமரிப்புத் தேவைகளை மதிப்பீடு செய்யும்போது, உங்கள் AMEP சேவைவழங்குநர் நீங்கள் இயலுமானளவு விரைவாக உங்கள் கல்வியைத் தொடர உங்களுக்கு பல்வேறு விருப்பத்தேர்வுகளைத் தருவார். உதாரணமாக, நீங்கள் கீழே கொடுக்கப்பட்டனவற்றைச் செய்யும்படி கேட்கப்படலாம்:

- குழந்தைப்பராமரிப்புடன் கூடிய சமூகநிலையத்தில் படித்தல்
- நீங்கள் விரும்பியதைவிட மேலும் பயணித்தல்
- குழந்தைப்பராமரிப்புஇடம் கிடைக்கும்வரை வீட்டுஆசிரியர் அல்லது தொலைக்கல்வியூடாக படித்தல்.

உங்கள் தேவைகளை குழந்தைப்பராமரிப்பு ஒழுங்குகள் பூர்த்தி செய்யாதுவிட்டால், நீங்கள் கட்டாயமாக AMEP சேவைவழங்குநருடன் கலந்துரையாட வேண்டும்.

குழந்தைப்பராமரிப்பு குறித்து மேலதிக தகவல்களுக்காக, AMEP சேவைவழங்குநருடன் தயவுசெய்து பேசவும்.